# தொண்டன்

ஆரம்பம்: பெப்ரவரி 1969

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



ஜூலை - ஆகஸ்ட் - 1998 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்''

விண்ணக மகிமையில்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தந்தையே
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம்மனங்கள்
அன்பான உம்வதனம்
அகலவில்லை எம்திரையில்
சீக்கிரத்தில் நீர் சென்றது
சிருஷ்டிகரின் சித்தமோ?

## அமரர் சின்னையா ஜோசப்

(அதிபர் - நாமகள் வித்தியாலயம் - திருமலை)

**மண்ணில் மலர்ந்தது:**
16-09-1938.

**விண்ணில் விரைந்தது:**
05-07-1997.

பிரிவால் துயருறும்

**மனைவி, பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.**

32, ஆசிரியர் சதுக்கம்,
உவர்மலை, திருகோணமலை.



# இரண்டாமாண்டு நினைவஞ்சலி

## திருமதி இருதயமேரி அந்தோனிப்பிள்ளை

**தோற்றம்:**
08-04-1920.

**மறைவு:**
15-08-1996

என் உயிரைச் சாவினின்று விடுவித்தார்
என் கண் கலங்காத படியும் என் கால்
இடறாத படியும் செய்தார்

தி. பாடல் 115/8

ஆண்டவரில் ஆன்மாவை ஒப்புக்கொடுத்த

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

பொதுசன நூலகம்
-8 SEP 1998
யாழ்ப்பாணம்

# தொண்டன்

ஜுலை - ஆகஸ்ட் - 1998

மலர்: 30 இதழ்: 06

ஆசிரியர்:
A. தேவதாசன்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:
S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX 44,
BATTICALOA. 30000
Tel: 065 - 22723

விலை: 10/-

ஆண்டுச் சந்தா: 120/-
(தபாற்செலவு உட்பட)



-9 SEP 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

உள்ளே.........

1. இதயந்திறந்து ... 02
2. புனித அன்னை மரி ... 03
3. மதங்கள் மனிதர்களை ... 04
4. 82 வயதில் அமரராகி ... 07
5. புனித நாட்டுப்பயணம் ... 08
6. மெல்லிசை பாடகர் ... 10
7. இயேசு புகழ்பாடும் ... 11
8. கறுத்த மனிதர் ... 13
9. திருச்சபைச் செய்திகள் ... 16
10. ம(னி)தம் ... 18
11. நன்றியும் நஞ்சும் ... 20
12. சுவடுகள் ... 21
13. புத்தகங்கள் எழுதும் ஆவி ... 22
14. விவிலிய - பொது அறிவு ... 24
15. போட்டி முடிவுகள் ... 26

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயந்திறந்து............

சிகப்பு விளக்கு ஓர் அடையாளம்,
வெள்ளைக்கொடி இன்னொரு அடையாளம்.
மண்டை ஓடு வேறொரு அடையாளம்,
முத்தம் அன்பின் அடையாளம்.
அது போன்று,
இதயம் அன்பின் அடையாளம்
காதலர்கள் கடிதங்களில்
இதயங்கள் வரையப்படுகின்றன
வார்த்தைகளால் சொல்லமுடியாத அன்பை
இதயத்தால் வரைந்து அனுப்புவார்கள்
இதயம் சொல்லும் அன்பு
ஆழமானது, அர்த்தமுள்ளது
அன்பேயுருவான ஆண்டவரும்
தம் அன்பை இதயத்தின் வழியாக வெளிப்படுத்தினார்
அதன் பொருட்டு அவரை
''திரு இருதய ஆண்டவர்'' என அழைக்கிறோம்.
அவர் அன்பு மயமாகவும், அன்புக்கடலாகவும் இருக்கிறார்.

''தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட
மேலான அன்பு யாரிடமும் இல்லை'' என்கிறார்.
இவை வெறும் வார்த்தைகள் அல்ல
தாம் கூறிய வார்த்தைகளை வாழ்க்கை நிகழ்ச்சியாக்கினார்
அன்பை கொடுத்தவர்,
அன்பை கேட்கிறார்.
பேதுருவை பார்த்துக் கேட்டார்...........
அந்த அன்பு வாழ்க்கை நிகழ்ச்சியாக,
செயலாக அமைவதையே அவர்
எதிர்பார்க்கிறார்.
அன்பு செய்கிறேன் என்ற பேதுருவை பார்த்து,
அதை செயலில் காட்டு,
வாழ்க்கை நிகழ்ச்சியாக்கு
எனக் கேட்டார்.
''என் ஆடுகளை மேய்'' என்றார்.
நீ இறைவனை அன்புசெய்தால்
அதை செயலில் காட்டு.

★ ஆசிரியர்



பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களை தலைமீது சூடியிருந்தார்.

—திருவெளிப்பாடு 12:01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அன்னை



அன்னைமரி
எங்கள்
அனைவருக்கும் தாய்

நாசரேத்தூரின் முத்து
இந்த நானிலத்துக்கு
வெளிச்சம் தந்தவள்

ஆவியின் அருளால்
கருவானாய் என்றபோது
அன்னையில் விசுவாசம்
தன்னை
அழகுபடுத்திக் கொண்டது

கணவனை அறியாது
கருவாகி
கடவுளையே பெற்றெடுத்த
மகராசி

பேருக்கு ஒருபிள்ளை
வைத்திடாது
ஊருக்குத் தந்துவிட்ட
உலக மாதா

குடும்பம் கோயிலென்பதை
குவலயத்துக்கு
அடையாளப்படுத்திய அன்னை

ஆணாதிக்க சமூக அமைப்பில்
ஆசைக்கு மேலே
பேசப்படுபவள்

உலகத்தை மீட்டவரை
உதரத்தில் தாங்கி
உலகுக்கே தாயானவள்

இந்தப் பெண்ணில்தான்
எத்தனை அதிசயம்!
அதனால் தானோ
விண்ணுக்கு ஏறி
விருது வாங்கினாள்!

--மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்கள் மனிதர்களை உருவாக்கவேண்டும்

★ நேசன் அடிகள்


''பகவத்கீதை இந்துக்களை உருவாக்கியிருக்கலாம். திருக்குர்ஆன் இஸ்லாமியர்களை உருவாக்கியிருக்கலாம். புத்தரின் போதனைகள் பௌத்தர்களை உருவாக்கியிருக்கிலாம். பைபிள் கிறிஸ்தவர்களை உருவாக்கியிருக்கலாம். ஆனால் இவை அனைத்தும் சேர்ந்து இன்னும் மனிதர்களை உருவாக்கவில்லையே!'' என்று அங்கலாய்க்க வேண்டிய சூழ்நிலையில் உலகம் இன்று உருண்டுகொண்டிருக்கிறது. ''மனிதர்கள் வேதங்களை உண்டாக்கினார்களா என்பதல்ல முக்கியம். வேதங்கள் மனிதர்களை உண்டாக்கியிருக்கின்றனவா என்பதுதான் இன்றைய கேள்வி'' என்கிறார் கவிஞர் வைரமுத்து. மதங்கள் பற்றி சிந்திக்கும்போது இந்த அற்புதமான சிந்தனைகளை நாம் ஆழமாக நோக்க வேண்டும்.

## அனைத்து மதங்களினதும் ஆணிவேர் அன்பே

ஒவ்வொரு மதமும் அன்பையே தனது அடிப்படையாகவும் ஆணிவேராகவும் கொண்டுள்ளது.

''அன்புக்குரியவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக! ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்துகொள்வதில்லை. ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்'' (பைபிள் - 1 யோவான் 4:7-8) என்கிறது கிறிஸ்தவம்.

''அன்புடன் கூறும் இன்சொல்லும் மன்னிப்பும் மிக்க மேலானவையாகும்''. (குர்ஆன் 2:263) என்கிறது இஸ்லாம்.



''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே''
(திருமூலர்)

என்கிறது இந்துமதம்.

அனைத்து மதங்களும் கூறுகின்ற தத்துவங்களை, கோட்பாடுகளை சுருக்கி சாறு பிழிந்து பார்த்தால் மிஞ்சுவது அன்புதான். ''அன்பை அடிப்படையாகக்கொண்ட ஒழுக்கமே மதம்'' என்கிறார் சுவாமி இராமக்கிருஷ்ணர்.

## மதங்களின் பெயரால் மனித அவலங்களா?

ஒருவரை ஒருவர் புரிந்து, ஏற்று, மதித்து உறவுகொண்டு வாழவேண்டிய மதங்கள் பல தடவைகளில் வேற்றுமைகளையும் வேறுபாடுகளையும் பகையுணர்வுகளையும் வளர்த்துக்கொண்டிருக்கின்றன. மதப்பற்று என்பது மதவெறியாக மாறி மனிதாபிமானத்தையே மண்தோண்டிப் புதைக்கின்ற அளவுக்கு சென்றுவிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990-91ம் ஆண்டுகளில் நடைபெற்ற அமெரிக்க - ஈரான் போருக்கு அடிப்படைக் காரணம் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருக்கும் பகைதான் என்று சொல்லப்படுகின்றது.

அரபு நாடுகளுக்கும் (பலஸ்தீன நாடு) இஸ்ராயல் நாட்டிற்கும் இடையே இடம் பெற்றுவரும் குழப்பங்களுக்கும் போர்களுக்கும் காரணம் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையே இருக்கும் பகைமைதான் என்று கருதப்படுகிறது.

இங்கிலாந்து நாட்டிற்கும் அயர்லாந்து நாட்டிற்கும் இடையே இடம்பெற்றுவரும் முறுகல் நிலைக்கும் குழப்பங்களுக்கும் காரணம் கத்தோலிக்கருக்கும் கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்களுக்கும் இடையே உள்ள பகைமைதான் என்று பேசப்படுகின்றது.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இருந்துவரும் தீராத முரண்பாடுகளுக்கும் முறுகல் நிலைக்கும் காரணம் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உள்ள பகைமைதான் என்று நம்பப்படுகிறது

இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு உள்நாட்டு யுத்தமாக பரிணாமம் பெறுவதற்கு காரணம் பௌத்த மதவாதிகளின் கடினப் போக்குதான் என்று சொல்லப்படுகிறது.

இந்தியாவில் காலத்திற்குக்காலம் ஏற்படும் மதக்கலவரங்களுக்கும் உயிர், உடைமைகளின் சேதத்திற்கும் காரணம் இந்து முஸ்லிம் மதத்தவர்களிடையே உள்ள முறுகல் நிலையே என்று கருதப்படுகின்றது,

இப்படியாக நாடுகளுக்கிடையேயும் ஒவ்வொரு நாட்டுக்குள்ளேயும் மதத்தின் பெயரால் மனித சமுதாயம் அவலங்களைச் சந்திக்கிறது. மக்கள் சமுதாயத்தைப் பிரித்துக் கூறுபடுத்தி வேற்றுமைகளை விதைத்து வேறுபாடுகளைத் தூண்டி பகையுணர்வுக்கு தூபம் போட்டு சண்டைகளுக்கும் அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் காரணிகளாக மதங்கள் இருக்கும்போது ''மதம் மனிதனை மயக்கும் மது'' என்று சொல்லப்படுவதில் நியாயம் இருப்பதுபோல்தான் தெரிகிறது. ''மதங்களுக்கு இன்று மதம் பிடித்திருக்கின்றபடியால் தான் தேசங்கள் இன்று சேதங்களுக்கு உள்ளாகின்றன''.

''மதம்'' என்ற மகுடத்தின்கீழ் ஒரு புதுக் கவிதையாளர் இப்படி எழுதுகின்றார்.

''மதம்''
யானைகளுக்கு
தப்பித்தவறி வரும்
மனிதர்களுக்கு எப்போதும் வரும்

இன்று மதங்கள் மட்டில் பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. உலகத்தில் ஊர்களில் நடக்கும் தீமைகள், அநீதிகள், கொடுமைகளுக்கு எதிராக மதங்கள் குரல் கொடுக்காமல் வாய்மூடி மௌனிகளாக இருந்துவிடுகின்றன என்பது இக்குற்றச்சாட்டுகளுள் ஒன்று. மதங்கள் தமது மத அனுஷ்டானங்களுக்குள் தம்மை தமது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்திக் கொள்பவையாக மட்டுப்படுத்திக் கொள்பவையாக இருந்துவிடுகின்றன என்ற அதிருப்தியும் மதங்கள் குறித்து எழுப்பப்படுகின்றன. எனவே ஒவ்வொரு மதமும் சமுதாயத்தின் மட்டில் தன்னுடைய ஈடுபாடு என்ன என்பதுபற்றி மீள் பரிசீலனை செய்யவேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். மதத்தின் பெயரால் நிகழும் மனித அவலங்கள் பற்றிச் சிந்திக்கும்போது குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய முக்கிய அம்சம் ஒன்று உள்ளது. அதாவது மதத்தின் பெயரால் நிகழும் அவலங்களுக்கு மதத்தத்துவங்களோ மதக் கோட்பாடுகளோ காரணமல்ல. மாறாக ஒவ்வொரு மதங்களிலும் உள்ள மதத் தீவிரவாதிகள் அல்லது மத அடிப்படைவாதிகளே (Religions Fundamentalists) இவற்றிற்குக் காரணமானவர்கள். மனிதாபிமானிகளாக இல்லாத மத வாதிகளால் யாருக்கு என்ன இலாபம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதங்களுக்கு இடையே உரையாடல் உறவாடல்

மதங்களின் பெயரால் - கடவுள்களின் பெயரால் இடம்பெறும் போர்கள், அழிவுகள் குறித்து நமது கடவுள்கள் என்ன நினைத்துக்கொண்டிருப்பார்களோ? என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. நிச்சயமாக இந்தக் கடவுள்கள் இவற்றைப் பார்த்து வேடிக்கையாக சிரித்துக்கொண்டிருப்பார்கள்.

உன் மதமா என் மதமா
ஆண்டவன் எந்த மதம்
நல்லவங்க எந்த மதம்
ஆண்டவன் அந்த மதம்

என்கிறார் ஒரு சினிமாக் கவிஞர். மதநெறி மதிவெறியாக இன்று மாறிவருகின்றது. மக்களை முழுவிடுதலைக்கு இட்டுச் செல்லவேண்டிய மதம் மக்களைப் பிரித்து வைத்து அடிமைப்படுத்த துணைபோகின்றது எனவே மதங்களுக்கிடையே உரையாடல் உறவாடலை நிகழ்வதன்மூலம் மத ஒருமைப்பாட்டை, ஒன்றிப்பை, நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். மத உரையாடல் என்பது வேறுபட்ட சமயத்தவர்கள் கூடிப்பேசிவிட்டுப் பின்னர் பிரிந்து செல்வதல்ல. மனித வாழ்வின் துடிப்புக்களோடும், வாழ்க்கை அனுபவங்களோடும் நாம் கொள்ளும் உறவுதான் உரையாடல். நாம் பிறசமயத்தவரின் உணர்வுகளை மதிக்கவேண்டும். பிற சமயத்தில் காணப்படும் நல்ல கருத்துக்களை அங்கீகரிக்கவேண்டும்.

''மதம்பற்றி என்றும் போராடாதே. மதம் பற்றிய சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையையே புலப்படுத்தும்'' என்கிறார் சுவாமி விவேகானந்தர். ''இதர தெய்வங்களைப் பழித்தல், பகைத்தல் போன்ற மூடச் செயல்களை முற்றாக விட்டுவிடும் படியாக போதிக்கவேண்டும்'' என்கிறார் பாரதியார். மதங்கள் தம்மைப் பிரிக்கின்ற அம்சங்களை முதன்மைப்படுத்தாது விட்டு விட்டு தம்மை இணைக்கின்ற அம்சங்கள் எவை என்பதை ஆராய்ந்து அறிந்து அவற்றினூடாக மத நல்லிணக்கத்தை நிலை நிறுத்த முயலவேண்டும்.

பிற சமயத்தவரோடு நல்லுறவை ஏற்படுத்த நிறைய சந்தர்ப்பங்கள் உள்ளன. ஏனைய மதத்தவர்களின் திருவிழாக் கொண்டாட்டங்களில் பங்கெடுக்கலாம். ஊரின் பொதுப்பணிகளில் அனைவரும் இணைந்து ஈடுபடலாம். வறட்சி, வெள்ளம், விபத்துக்கள், கலவரங்கள், போர்கள் போன்றவற்றின்போதுபாதிக்கப்பட்டவர்களுக்குஅனைத்து மதங்களும் சேர்ந்து உதவலாம். சமூக அநீதிகளுக்கு எதிராக அனைத்து மதங்களும் சேர்ந்து குரல் கொடுக்கலாம், போராடலாம். இவ்வாறு நீதி, நேர்மை, உண்மை, அன்பு நிறைந்த சமுதாயம் மலர மதங்கள் உழைக்க முடியும். அதேவேளையில் இக்கூட்டு முயற்சிகளினூடாக மதங்கள் தமக்கிடையே உரையாடலையும் உறவாடலையும் வளர்த்துக்கொள்ளமுடியும்.

## வெப்பம் / குளிர் ஊடகங்கள் (Hot / Cold Media)

தொடர்பூடகங்களை மெக்லூகன் என்னும் அறிஞர் வெப்பம் / குளிர் ஊடகங்கள் என்று இரு பிரிவாகப் பிரிக்கிறார். வெப்ப ஊடகம் தகவல்களால் நிரம்பி இருக்கும் பங்கேற்புக்கு இதில் அதிக இடம் இல்லை. பெறுவோர் பங்கேற்று முழுமை செய்து கொள்ளும் அளவுக்கு வாய்ப்பு இல்லாமல் அதுவே நிரம்பி இருக்கும். குளிர் ஊடகத்தில் மிகக் குறைவான தகவல்களே தரப்படும். பெறுவோர் தாமே இட்டு நிரப்பிக்க பல இடமுண்டு.

புத்தகம், வானொலி, திரைப்படம், ஒளிப்படம், கார், ஓவியன் அகரவரிசை, விரிவுரை ஆகியன வெப்ப ஊடகங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 82 வயதில் அமரராகிவிட்ட
## கவிமணி, இலக்கியமணி, சமாதான நீதவான்
# ஆரையூர் நல். அழகேசமுதலியார்

ஆரையூர்த் தாய் ஈன்ற அரும்மணியே
அன்புகொள் இதயத்துக் கோர் மணியே
சீரைப்பொழியும் செந்தமிழ்க் கவிமணியே
செங்குந்த குலம் ஈந்த செல்வமணியே
பேரார் புகழில் பெருங்குலவு தமிழ்மணியே
பேசு செந்தமிழ் தாய்தந்த தவமணியே
நீராய்க் கண்ணீர் நாம் சொரிய
நீள்புவி விட்டு வான்புகுந்தனையோ!

சித்தாண்டித் திருமுருகன் புராணம் தந்தாய்
செந்தமிழ்த் தாய்க்கோர் காவியம் இசைத்தாய்
நித்தியம் நீலகண்டற்கோர் அகவல் யாத்தாய்
நிறைவு கந்தவிரத அம்மானை தந்தாய்
முத்தமிழ் ஆரையூர்க் கோவை யாத்தாய்
முக்கனிச் சுவையெனப் பலகவிதந்தாய்
எத்தனை எத்தனை கவிதைகள் ஐயா
இனிக்குமே எம்இதயம் நின்கவிகேட்டால்

மட்டுநகர்க்கோர் மணக்கும் தமிழ்மலர்
மதிப்புயர் புலவர்கள் ஏற்று மாபுலவன்நீ
எட்டுத்திசையிலும் நின் இயல் தமிழ்வெள்ளம்
எங்கும் பெருகின உயிருடல்குளிர்ந்தன
வட்டமாய் ஆய்வோர் உன்வலம் வருவார்
வாய்மைத் தமிழில் பல்பொருள் கோப்பார்
பட்டம் பலபெறு பைந்தமிழ்ப் பாவலா
பரமன் திருமுன் பாடவிரைந்தனையோ!

விஸ்வப்பிரம்மஸ்ரீ
காந்தன் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நாட்டுப் பயணம்
## தொடர் 25

□ அருள் தந்தை P. ஜோசப்.

### மகதா (Magdala)

இயேசுவின் காலத்தில் பிரபல்யமாயிருந்த மற்றுமொரு நகரம் 'மகதா' வாகும். இது கலிலேயாக் கடலின் ஓரத்தில் திபேரியாவுக்கு வடமேற்கே 4 மைல் தொலைவில் அமைந்திருந்தது. ''மகதா'' என்பதன் பொருள் 'உயர்ச்சியின் கோபுரம்' எனக் கூறப்படுகின்றது. இதற்கு அண்மையில்தான் கப்பர்நகூம், தால்மனுத்தா ஆகிய நகரங்களும் அமைந்திருந்தன. (காண்; மத். 15:39 மாற். 8:10)

'மகதா' கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபல்யமாவதற்குக் காரணம் அந்த ஊரைச் சேர்ந்த மரியாள் என்ற பெண்ணிடமிருந்துதான் இயேசு ஏழு அசுத்த ஆவிகளை விரட்டி அவளைக் குணமாக்கியிருந்தார். (லூக். 8:2) அவள் சொந்தப் பெயர் மரியாள். இந்த ஊரைச் சேர்ந்தவள் என்பதால் மதலேன் மரியாள் எனவும் மகதலேன் மரியாள் என்றும் அழைக்கப்படுகின்றாள். அதுவே அவளது பிறப்பிடமும் வசிப்பிடமுமாக இருந்தது. இயேசுவால் குணமாக்கப்பட்ட பின் அவள் அவருடைய விசுவாசமுள்ள, பிரமாணிக்கமுள்ள சீடத்தியாக மாறினாள். ஏனையவர்களைப்போன்று அவளும் தன் உடமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தாள். அவரது சிலுவை மரணம்வரை அவரைப் பின்தொடர்ந்தாள். உயிர்த்த இயேசுவை முதன் முதல் காணும் பேறுபெற்றவளும் அவள்தான். (யோவான் 20;114)

இன்று அந்தநகரம் இருந்த இடமே இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளது. கப்பர்நகூமுக்கு நடந்த அதே கதிதான் இதற்கும் நடந்துள்ளது. யோசேபுஸ் என்ற யூத வரலாற்றாசிரியரின் குறிப்புப்படி எருசலேம் அழிவுக்குப் பின் யூதரின் பேர்போன கல்விக்கூடமாக மகதா அமைந்திருந்தது. அங்கு 40,000 மக்கள் வாழ்ந்தனர். 230 வள்ளங்கள் அவர்களுக்குரியதாக இருந்தன. தீத்து மன்னன் பாலஸ்தீனாவைக் கைப்பற்றியபோது மகதாவில் இருந்த 6700 பேர் கொல்லப்பட்டனர் 6000 பேர் கொரிந்து நகரத்தில் கால்வாய் அமைக்க அனுப்பப்பட்டனர். 30,000 பேர் அடிமைகளாக விற்கப்பட்டனர். அங்கிருந்த கற்குவியல்கள்தான் இந்த வரலாற்றுக்குச் சான்று பகர்கின்றன. அது எவ்வளவு உண்மை என்பதை நாங்கள் நேரிலேயே கண்டோம்.

### யோர்தான் நதி

பாலஸ்தீனா நாட்டுக்குச் செல்பவர்கள் யோர்தான் நதியைக் காணாமல் செல்ல முடியாது. ஏனெனில் அது வடக்கிலிருந்து தெற்காக 65 மைல் நீளமுள்ள பரந்த பூமியைக் கடந்து சென்றாலும் அது பல இடங்களில் வளைந்தும் நெளிந்தும் செல்வதால் அதன் உண்மையான நீளம் 165 மைல்கள் எனக் கூறப்படுகின்றது. அதன் சராசரி அகலம் 100 அடிகளாகும். எங்களது புனித நாட்டுக்கான பயணத்தில் பல சந்தர்ப்பங்களில் அதனைத் தொலைவில் கண்டு களிக்கக் கூடியதாக இருந்தாலும், அதில் இறங்கி அதன் குளிர்ச்சியை, மென்மையை அனுபவிக்கும் வாய்ப்பு இன்று எமக்குக்கிடைத்தது.

யோர்தான் நதி என்றதும் எம் மனக் கண்முன் வருவது இயேசுவின் திருமுழுக்குத்தான். ''திருமுழுக்கு யோவான் பாலை நிலத்துக்கு வந்து, பாவமன்னிப்படைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்று பறைசாற்றி வந்தார். பலர் அவரிடம் சென்று தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவரிடம் திருமுழுக்குப்பெற்று வந்தனர். அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசேரத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திரு முழுக்குப் பெற்றார். (மத். 3, மாற்கு 1, லூக். 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் புகழ்மிக்கதும் பழைய, புதிய உடன்படிக்கை மக்களின் இதயத்தைக் கவரும் புனிதநதியுமானயோர்தான் நதிக்குரியபெயர் விளக்கத்தை வழிகாட்டி எடுத்துரைத்தார். யோர்தான் என்பது 'AL URDUN' என்ற சொல்லிலிருந்து வருகிறது. அதன் பொருள் 'கீழே இறங்குவர்' என்பதாகும். பெயருக்கும் அதன் இயல்புக்கும் பொருத்தமாக உள்ளது. ஏனெனில் யோர்தான் நதியானது 3000 அடி உயரமான பனி படர்ந்த ஹேர்மோன் (HERMON) மலையிலிருந்து உருவாகி 1316 அடி கடல் மட்டத்திற்குக் கீழ் உள்ள சாக் கடலில் போய் சங்கமமாகும் வரை சுமார் 4500 அடி கீழே இறங்கி வருவதால் அதன் பெயர்ப் பொருத்தத்தை நேரிலேயே காணக் கூடியதாக இருந்தது.

அதுமட்டுமல்ல, புனித நாட்டின் இரு கடல்களோடும் கலக்கும் ஒரே நதியாகவும் யோர்தான்நதி அமைந்துள்ளது. நதி உருவாகும் இடத்திலிருந்து 9 மைல் தொலைவில் உள்ளது கலிலேயாக்கடல். கலிலேயாக்கடல் 312 அடி கடல் மட்டத்திற்குக்கீழ் உள்ளது. யோர்தான் நதியானது முதலில் கலிலேயாக் கடலில் கலந்து பின்னர் அங்கிருந்து புறப்பட்டு யோர்தான் பள்ளத்தாக்கு வழியாக ஓடி (2 அரசர் 25:4; 2 நாளாகமம் 4:17) 1316 அடி கடல் மட்டத்திற்குக் கீழ் உள்ள சாக்கடலில் வீழ்கிறது. எனவே இரண்டு கடல்களுக்குமிடையில் அதன் வீழ்ச்சி 1000 அடியாகும். இன்று யோர்தான் நதி சாக்கடலில் சங்கமமாகிறது என்பதை விட மறைந்து விடுகிறது என்று சொல்வதே பொருந்தும் சோதோம் அழிவிற்கு முன்னர் யோர்தான் தியானது தொடர்ந்து தெற்கு வரை ஓடி செங்கடலில் சங்கமித்ததாக கூறப்படுகிறது.

வருடந்தோறும் யோர்தான் பெருக்கெடுத்து ஓடும் சந்தர்ப்பத்தில்தான் யோசுவா தலைமையில் இஸ்ராயேல் மக்கள் யோர்தானைக் கடந்ததாக வரலாறு கூறுகிறது. (யோசுவா 3:15). 'யோர்தானுக்கு அப்பால்' என்ற சொற்றொடர் நதியின் கிழக்குப் பகுதியைக் குறித்தது. ஆனால் யோசுவா யோர்தானைக் கிழக்குப் பகுதியிலிருந்து கடந்ததால், நதியின் மேற்குப்பகுதி 'யோர்தானுக்கு அப்பால்' என அழைக்கப்பட்டது.

யோசுவா யோர்தானைக் கடந்த வரலாற்று நிகழ்ச்சிக்குப் பின்னர் எலியர், எலிசேயு இறைவாக்கினர்களால் மேலும் இரு தடவை அற்புதமாகக் கடக்கப்பட்டது. (2 அரசர் 2:8,14). சீரியா மன்னனின் (படைத்தலைவனான நாமானின் தொழுநோய் குணமாக்கப்பட்டதும், தொலைந்த கோடரி மிதந்தும் யோர்தானில்தான் (2 அரசர் 5:14; 6:6).

இயேசு திருமுழுக்குப் பெற்ற இடம் எரிக்கோவிலிருந்து கிழக்கே 5 மைல் தூரத்தில் இருந்தது. தற்போது அவ்விடம் யோர்தான் நாட்டின் எல்லைக்குள் வருவதால் அங்கு இஸ்ராயேல் நாட்டு மக்கள் செல்ல முடியாது. அத்தோடு இஸ்ராயேல் நாட்டுக்கு வருபவர்களும் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. யோர்தான் நாட்டுக்கு ''வீசா'' பெற்று அங்கு சென்றால்தான் இயேசு திருமுழுக்குப் பெற்ற அதே இடத்தைத் தரிசிக்கலாம். ஆனால் அதற்குப் பதிலாக பாலஸ்தீன நாட்டில் கலிலேயாவுக்கு அண்மையில் யோர்தான் நதியில் நீராடவும், புனித நீராட்டல், திருமுழுக்குப் பெறவும் ஓரிடத்தை ஒழுங்கு பண்ணி வைத்துள்ளனர். ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் தினமும் வந்து யோர்தான் நதியில் புனித நீராடிச் செல்கின்றனர். நாங்களும் அந்நீரில் இறங்கி எங்கள் தலைகளை நனைத்துக்கொண்டோம் கலிலேயாக் கடல் நீர்போன்று அதன் நீர் குளிர்மையாகவும் மென்மையாகவும் இருந்தது. வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகையால் அனைவரும் படம் பிடித்துக் கொண்டோம்.

- தொடரும் -

நீங்கள் எதனை உண்கின்றீர்களோ அதனையே உங்கள் பணியாளருக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் எதை உடுக்கின்றீர்களோ அதையே அவர்களுக்கும் உடுக்கக் கொடுங்கள். நபி (ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிசைப் பாடகர்

# G. F. லோப்பஸ் காலமானார்

'கண்மணி ஆடவா' புகழ் கிறரி பேர்டி லோப்பஸ் கடந்த ஜூன் மாதம் 10ம் திகதி காலமானார். நிர்மலா திரைப்படத்தில் 'கண்மணி ஆடவா' என்ற பாடலைப் பாடிப் புகழ்பெற்ற லோப்பஸ் ஈழத்தின் மூத்த மெல்லிசைப் பாடகர்களில் ஒருவராவர். இலங்கை வானொலியில் பல மெல்லிசைப் பாடல்களைப் பாடியுள்ள இவர் திருகோண மலையைச் சேர்ந்தவர். திருமலை பத்மநாதனின் இசைக்குழுவிலும் இணைந்து இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுள்ளார்.

மட்டக்களப்புக்கு வந்து ஏறத்தாள இருபது ஆண்டுகள் ஆயரில்லத்தில் பணியாற்றியதோடு மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள பல ஆலயங்களிலும் பாடகர் குழுக்களின் பயிற்சியாளராக விளங்கியவர். மட்டக்களப்பில் நடைபெற்ற பல கிறிஸ்தவ விழாக்கள் கலை நிகழ்ச்சிகளில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு இருந்தது. பல கிறிஸ்தவப் பாடல்களை ஒலி நாடாக்களுக்காகப் பாடியுள்ள இவர் அனைவருக்கும் நட்புடன் உதவும் நெஞ்சமும், தோழமை உணர்வும் கொண்டவர். கடந்த சில ஆண்டுகளாக உடல் நலமற்று அனைத்திலும் ஒதுங்கியிருந்த போதும் தேடிவருபவர்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்ய பின்னிற்காதவர். இறப்பதற்கு இரு வாரங்களுக்கு முன்புகூட கடந்த ஜூன் மாதத்தில்மட்டக்களப்பில்மேடைஏறிய 'நீ எதிர்கொண்டதேன்' நாட்டிய நாடகத்துக்காக பாடல் பயிற்சிகளிலும், ஒலிப்பதிவிலும் ஈடுபட்டிருந்தார். திடீரென நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட லோப்பஸ் அவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு அங்கு மரணமானார்.

ஈழத்து இசை உலகிலும், திருவழிபாட்டிசையிலும், திருச்சபைப் பணிகளிலும் பயனுள்ள பல பங்களிப்புகளைச் செய்த கிறகரி பேர்டி லோப்பஸ் அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா இறை சாந்தியில் இன்ப வாழ்வுபெற இறைஞ்சுகிறோம். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

-மலர்

## திருச்சபைச் செய்தி

### கோடி அற்புதங்கள் புரியும் புனித அந்தோனியார் பெருவிழா

திருமலை, பெரியகடைப்பங்கில், புனித அந்தோனியாரின் பெருவிழா 5-6-98 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14-6-98 அன்று காலை திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுற்றது.

தினமும், திருச்செபமாலையும், புனிதரின் பிரார்த்தனையும், மறையுரைகளும், திருப்பலியும் நிறைவேற்றப் பட்டன. இம்முறை மறையுரைகளின் தலைப்புகள் புனிதர்களை மையமாகக் கொண்டிருந்தன.

இந்த உலகிலே உன்னைக் கவனித்து உனக்கு சரியான மருந்து கொடுக்கக் கூடிய மருத்துவன் நீதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு புகழ்பாடும் ஞானப்பள்ளு



★ கவிஞர் வாகரை வாணன்

மருத நிலத்து மக்களின் உரிப்பொருளாக விளங்குவது ஊடலும் கூடலுமாகும். இந்த உரிப்பொருளே பள்ளு இலக்கியங்களின் உயிர்த்துடிப்பு எனலாம். பாட்டியல் எனும் நூல், பள்ளு என்பதற்கு உழத்திப்பாட்டு என்றே பொருள் தருகின்றது. பள்ளர் எனும் சொல்லுக்கு தமிழ் அகராதியும் உழவர் என்றே பொருள் உரைக்கும். பள்ளம் எனும் சொல்லே பள்ளர் எனும் சொல்லின் ஊற்றுக்கண். பள்ளம் வயலைக் குறிக்கும். இவற்றிலிருந்து பள்ளு இலக்கியம் உழவர் பெருமக்களை முதன்மையாகக் கொண்டே இயற்றப்பட்டது என்பது தெளிவு.

பள்ளு நூற்கள் பற்பல. இதனை, ''நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ணமுடியாது'' எனும் பழமொழி எடுத்துக்காட்டும். பள்ளு நூல்களிலே, ஈழத்தில் தோன்றிய கதிரைமலைப்பள்ளு, பறாளை விநாயகர்பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு எனபனவும் அடங்கும்.

ஞானப்பள்ளு யேசு கிறிஸ்துவை நாயகனாகக் கொண்டு பாடப்பட்டது. ஞானம் எனும் சொல் யேசுவைக் குறிக்கும். இதனை விரித்துரைக்கின் ஞானமே வடிவான யேசு எனலாம். இதற்கு ஆதாரமாக

ஆதிகத்தன் திருவேதமாகிய
அரும் ஞானத்தையம் புவி மீதிலே
நீதியற்ற சொரூபமதாகிய
நீண்ட ஞான நிறைந்த பர்ளோதிட.

எனும் பாடலை இங்கே எடுத்து வைக்கலாம்.

பழந்தமிழ் நூல்கள் பலவற்றின் ஆசிரியர்கள் பெயர் தெரியாதிருப்பது போலவே இந்நூலாசிரியர் பெயரையும் நம்மால் அறிய முடியவில்லை. எனினும் இந்நூலாசிரியர் யாழ்ப்பாணக் கிறிஸ்தவர் என்பதனை

தழைவு பெற்ற யாழ்ப்பாண
சத்திய கிறிஸ்துவர்கள்
சந்ததமும் வாழவே.

எனும் பாடல்வரிகள் தெளிவாக்கும்.

ஞானப்பள்ளின் கதாபாத்திரங்கள் நான்கு பேர். பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைக்காரன் ஆகிய நான்கு பேரில் பள்ளனும் மூத்த பள்ளியும் ஜெருசலேமைச் சேர்ந்தவர்கள். இளைய பள்ளியின் பிறப்பிடம் உரோமாபுரி. இந்நூலில் உள்ள 257 பாடல்களில் 223 பாடல்கள் சிந்துகள் என்பார் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வின் முடிவின்படி இந்நூல் எழுந்த காலம் 1642 ஆகும்.

தமிழ்நாட்டு நிலமொன்றுக்குரிய உரிப்பொருளை பிறநாட்டு நிகழ்வோடு ஒன்றுபடுத்தி இப்பிரபந்தம் இயற்றப்பட்டிருப்பதால் அயல் சொற்கள் சில இந்நூலில் அரியாசனம் போட்டு அமர்ந்திருப்பதைக் காணலாம். இவ்வயல் சொற்களைத் திசைச் சொற்கள் என்று தமிழ் இலக்கணம் சுட்டும். இது போன்றே மண்வாசனை தரும் சொற்களும் இவ்விலக்கியத்திற்கு மணம் ஊட்டுகின்றன.

இவ்விலக்கியம் யேசு புகழ் பாடினும் பிற சமயங்களை இழித்துப் பேசவேயில்லை. இது கிறிஸ்தவர்களுக்குப் பெருமை தருவதாகும். இயேசு புகழ் பாடி பாமர மக்களைப் பக்தி மார்க்கத்தில் இட்டுச்செல்லும் இந்நூலாசிரியர் தமது நோக்கத்திற்குத் துணையாக, நிலையாமையையும் வற்புறுத்தத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளு இலக்கியத்தில் - ஆற்றில் வெள்ளம் வருதல் பகுதி - இயற்கை வருணனைக்கு உகந்ததாகும். இப்பகுதியினை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் ஞானப்பள்ளு ஆசிரியர் - நான்கு நிலங்களின் ஊடாக வெள்ளம் பாய்ந்து வருவதாகப் பாடுகின்றார். புலவர் வாயிலிருந்தும் பாடல்கள் வெள்ளமாகவே பாய்ந்து வருகின்றன. இனிய அப்பாடல்களில் இதுவும் ஒன்று.

அணியும் முல்லை நிலத்திற் புகுந்து
அண்டர்கள் சேரியில் தாவியே
அலர்த்த கொடியும் நிலத்தருவு
மலைய வேர்கள் விட்டுலையவே
மணியும் தரள வரம்பு கேளும்
வாழ்ச்சியாச்சியர் கொளிக்கவே
வாலத்துருளை போலக் குரல் விட்
டலையவே மனங் கலையவே.

ஞானப்பள்ளு ஆசிரியரின் இந்த வெள்ளப் பாடல்களைப் படிப்பவர்களுக்கு பிற்காலத்தில் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடிய இலங்கை வளப்பாடல்களில் சில நினைவுக்கு வராமல் போகா. இத்தகைய போக்கு இலக்கிய உலகில் எப்போதும் காணப்படும் ஒன்றாகும்.

மூத்தபள்ளியின் தோற்றத்தோடு ஆரம்பமாகி நூலாசிரியரின் அறிவுறுத்தலோடு முடிவுறும் இச் சிற்றிலக்கியம் ஏனைய பள்ளு இலக்கியங்களில் காணப்படும் சிருங்கார ரசமின்றி ஓர் சமய ஒழுக்க நெறிக் காவியமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு ஆசிரியரின் சமய நம்பிக்கையும் அறவொழுக்கத்தில் அவருக்கிருந்த பற்றுமே காரணம் எனலாம்.

---

எது நல்லது என்பதை நீ அறிந்து கொள்ளும் வரை அமைதியாக இருப்பது நல்லது.

---

## தொண்டன் வாசகர்கள் - விற்பனையாளர்கள் கவனத்திற்கு

கடந்த மூன்று ஆண்டுகளாக 'தொண்டன்' விலையில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. அதேவேளை நாட்டில் இதர பொருட்கள் யாவும் இக்காலப் பகுதியில் பல தடவைகள் விலையேறியுள்ளதை அவதானித்திருப்பீர்கள். அச்சகத்துறை சார்ந்த பொருட்களும் இதற்குள் அடங்கும். இதனால் தொண்டன் வெளியீட்டுச் செலவும் பலமடங்கு அதிகரித்துள்ளது. அதிகரிப்பின் பெரும் சுமையை நாம் தாங்கிக்கொள்ளும் அதேவேளை சிறு பகுதியை வாசகர்கள் தாங்கிக்கொள்ள தயங்கமாட்டீர்கள் என்றே நாம் நம்புகிறோம். அந்த நம்பிக்கையுடன் தொண்டன் பிரதி ஒன்றின் விலை 2-00 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் தொண்டன் தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 12/- . ஆண்டு சந்தா (தபாற்செலவு உட்பட) ரூபா 140/- . ஐந்து பிரதிகளுக்கு மேல் விற்பனைசெய்யும் மொத்த விற்பனையாளர்களுக்கு 5% கழிவு தரப்படும்.

வாசக அன்பர்கள் இச்சிறிய அதிகரிப்பைப் பொருட்படுத்தாது தொடர்ந்து ஆதரவு தர வேண்டுமென்று அன்புகூர்ந்து கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- நிர்வாகம்

---

இவ்வுலக வாழ்வை முடித்து மரணித்து விட்ட மனிதரைப்பற்றி கவலையுடன் பேசிக் கொள்கின்றீர்கள் அதைவிட்டுவிட்டு உங்களைப்பற்றி எண்ணிப்பாருங்கள். உங்கள் நிலைபற்றி சிந்தித்துப்பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# கறுத்த மனிதர் - வெள்ளை மனங்கள்

தொடர் - 5

ஆபிரிக்க பயணக் கட்டுரை

- எஸ். ஏ. இருதயநாதன்

ஓர் இனத்தின் அல்லது தேசியத்தின் இருப்பு என்பது எப்போதும் அதன் மொழி, பண்பாடு, பாரம்பரியம், வாழ்க்கைமுறை, வரலாறு, சமூக அமைப்பு எனும் அடிப்படைக் காரணிகளில் தங்கி உள்ளது. தென்னாபிரிக்காவை உருவாக்கும் கறுப்பின தேசியம், வெள்ளை இன தேசியம், இந்திய வம்சாவளித் தேசியம், கலப் எனப்படும் வெள்ளை கறுப்பு இனக்கலப்பு தேசியம் ஆகியனவும் தமக்கே உரித்தான மேற்குறித்த அனைத்து அடிப்படைக் காரணிகளையும் கொண்டுள்ளன.

தென்னாபிரிக்க பெரும்பான்மை கறுப்பின மக்களின் தேசீயம் எனப்படுவது வெள்ளையின அடக்குமுறை ஆட்சியாளர்களினால் கையாளப்பட்டதும் நசுக்கப்பட்டதும் அவர்களது வாழ்விடம் சார்ந்த சமூக அமைப்பு முறையினால் ஆகும். 1910ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் மூன்றுவகை வாழ்விடம் சார் சமூக அமைப்பு முறையைக் கொண்டிருந்தனர். அனைத்து மாகாணங்களிலும் காணப்பட்ட மாநகரங்களில் தொழில்புரிந்த கறுப்பினச் சமூகம், நகரங்களில் காணப்பட்ட குடியிருப்புக்களில் வாழ்ந்த கறுப்பினச் சமூகம், பண்ணை நிலங்களில் தொழில்புரிந்த கறுப்பினச் சமூகம் என அவை மூன்றும் வேறுபட்டன.

மாநகரங்களில் தொழில்புரிந்து அங்குள்ள குடியிருப்புக்களிலும், விடுதிகளிலும் வாழ்ந்த கறுப்பினச் சமூகம் கல்வி அறிவில் சிறிது அபிவிருத்தி அடைந்தும் வெள்ளை இனத்தவரின் நாகரீகத்தைத் தழுவியதாகவும் காணப்பட்டது. இச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் வெள்ளையின பணக்காரர்களின் வீடுகளிலும் அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும் மிகக்குறைந்த வேதனத்திற்கு பணிபுரிந்தனர். இவர்கள் திருமணம் முடித்திருந்தால் தமது குடும்பத்தினருடன் மாநகரத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள மிகநெருக்கமான குடியிருப்புக்களில் குடிசை அமைத்து வாழ்ந்தனர். இவர்களது குடிசைகள் தகரத்தினால் ஆனது. ஆபிரிக்க முறைப்படி, வட்டவடிவமான ஒரு அறையைக் கொண்டதாகக் காணப்பட்டது. மின்சாரமும் ஒரு தொட்டி நிறைந்த நீரும் இவர்களுக்கு இலவசம். இக்குடியிருப்புக்களை சுற்றி பாரிய முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு ஆயுதம் தாங்கிய படையினர் நிரந்தரமாக அமர்த்தப்பட்டிருந்தனர். குடியிருப்புக்களுக்குள் எந்நேரமும் நடமாடலாம். ஆனால் குடியிருப்புக்களைவிட்டு வெளியே வருவதற்கு மாநகருக்குச் செல்லும் வாகனம் வரும் நேரத்தில் மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டது. அதுவும் வெள்ளை இன வேலை கொள்வோரின் அடையாள அட்டை பெற்றவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். ஏனையவர்கள் குடியிருப்புக்களைவிட்டு வெளியில் செல்லமுடியாது. சிறிய பாடசாலை, மருந்தகம், மதுச்சாலை என்பன குடியிருப்புக்களில் வெள்ளையர்களால் நடாத்தப்பட்டன. ஏனைய பொருட்கள் நடமாடும் விற்பனை நிலையங்கள் குடியிருப்புக்களுக்கு வரும்போது பெற்றுக்கொள்ள வேண்டும். அடையாள அட்டை பெற்றுள்ளவர்களும்கூட மாநகர வீதிகளில் உலாவ முடியாது. வெள்ளையர்களுடனேயே செல்லமுடியும்.

மாநகரங்கள் பொதுவாக பாரிய விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், உல்லாச விடுதிகள், இரவு விடுதிகள், களியாட்டத் திடல்கள், நவீன வசதிகள் உடைய சர்வதேச உணவகங்கள், மதுச்சாலைகள், சூதாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையங்கள், கலைக்கூடங்கள் என்பனவற்றால் நிரம்பி இருந்தன. இவ்விடங்கள் யாவுமே கறுப்பர்களின் உழைப்பினாலேயே இயங்கின. இத்தகைய இடங்களில் பணிபுரிந்த கறுப்பர்கள் விசேட வர்ண உடைகளாலும் அடையாள அட்டைகளாலும் இனம் காணப்பட்டனர். மற்றும் தொழிலாளிகளாக பணிபுரிந்த கறுப்பின இளம் பெண்களும் ஆண்களும் குடியிருப்புக்களில் வாழ்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. மாறாக வெவ்வேறான விடுதிகளில் தங்கவைக்கப்பட்டனர். ஒவ்வொரு விடுதியிலும் 1000 பேர் குடியிருந்தனர். வெள்ளையர்களால் நிர்வகிக்கப்பட்ட உணவுச்சாலைகளிலும், மதுபானச்சாலைகளிலும் தமது பணத்தை செலவிட்டனர். போதை ஊட்டிகளும் இங்கு இரகசியமாக விற்கப்பட்டன. விடுதிகளைச் சுற்றி முள்வேலியும் படையினரின் பாதுகாப்பரன்களும் வழமை போன்று காணப்பட்டன.

ஆண்கள் விடுதிகள் சகலவித குற்றச்செயல்களையும் பயிலும் பாடசாலைகளாகத் திகழ்ந்தன. வெள்ளையினப் பொலிசாரின் கூலிப்படைகளும் விடுதிகளுக்குள் இரகசியமாக இயங்கின. இவர்கள் வெள்ளை இன முதலாழிகளுக்கெதிராக புரட்சியை தூண்டுவோரை இனம்கண்டு கொலைசெய்யப் பயன்பட்டனர். பெண்கள் விடுதிகள் விபச்சார மையங்களாகவும் பாலியல் இம்சைகளுக்குட்பட்ட சிறைச்சாலைபோன்றும் காணப்பட்டன. இங்குள்ள பெண்களுக்கு கட்டாயமாகக் கருத்தடை மருந்து ஏற்றப்பட்டது. காவல் எனும் பெயரில் செயல்பட்ட பொலிஸ் ஏஜண்டுகளுக்கு இவர்கள் அனுசரணையாக செயல்படுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

பொதுவாகவே மாநகரங்கள் யாவும் கறுப்பின தொழிலாளிகளை நம்பியே இயங்கின. அதேவேளை ஆயிரக்கணக்கில் தொழில்புரிந்த கறுப்பினத்தவரை மிகக் கவனமாகவே கையாண்டன. கூடிய வேதனத்துக்காக போராடமுடியாதவர்களாகவும், தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராகக் குரல் கொடுக்க முடியாதவர்களாகவும் அவர்கள் வலுவிளக்கச் செய்யப்பட்டு, தனிமனிதர்களாகக் கூறுபோடப்பட்டு கவனமாகக் கையாளப்பட்டனர். விடுதலை உணர்வே இவர்கள் பக்கம் தலைகாட்டாதிருக்க அனைத்து வகையான சமூக உளவியல் பின்புலங்களும் வெள்ளையினத்தவர்களால் நிறுவனமயப்படுத்தப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டன.

மாநகரங்களில் இந்நிலை என்றால் நகரங்களில் கறுப்பின மக்களின் நிலை வேறானது. நகரங்களின் ஒதுக்குப்புறங்களில் காணப்பட்ட பயன்பாட்டுக்கு உகந்ததல்லாத நிலங்களில் டவுண்ஸிப் (Township) என அழைக்கப்பட்ட குடியிருப்புக்களில் கறுப்பர்கள் வாழ்ந்தனர். சிறு கிராமங்கள்போன்று காணப்பட்ட இந்த ''டவுண்ஸிப்'' களில் பெருமளவிலான கறுப்பின குடும்பங்கள் மிக நெருக்கமாக வாழ்ந்தன. கிராமக் குடியிருப்புக்களைச் சுற்றி ஒவ்வொரு டவுண்ஸிப்பும் மிகப்பாதுகாப்பான அரண்களால் பிரிக்கப்பட்டன. பாதுகாப்பு நிலைகள் நிலையாகவே காணப்பட்டன. பாடசாலைகள், மருந்தகங்கள், கடைகள் என்பன கரையோரங்களில் ஆயுததாரிகளான வெள்ளையர்களால் நடாத்தப்பட்டன. டவுண்ஸிப்புக்குள்ளே எவ்வித நிர்வாக அலகுகளோ சமூக பாதுகாப்பு அமைப்புக்களோ இல்லை. இங்கு வாழ்பவர்கள் வெளியே செல்வதென்றால் வெள்ளையர்கள் அதாவது வேலைகொள்வோர் வந்து அழைத்துச் செல்லவேண்டும். ஏனையவர்கள் டவுண்ஸிப்புக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தனர். ஒரு டவுண்ஸிப் பொதுவாக 10,000 கறுப்பர்களைக் கொண்டிருக்கும். வெள்ளையின படையினர் இடையிடையே கவசவாகனங்களில் டவுண்ஸிப்புக்குள் உலாவருவர். இவ்வேளைகளிலேயே வன்முறைகள் வெடிக்கும். டவுண்ஸிப்பில் வசிப்பவர்கள் பெரும்பான்மையானவர்கள் நகரத்தொழிலாளிகளாகவும் சுரங்கத் தொழிலாளிகளாகவும் காணப்பட்டனர். இவர்களிடையே கறுப்பின தலைவர்கள், போராளிகள், அரசியல்வாதிகள் உருவாகினர்.

மூன்றாவது வகை கறுப்பின சமூகத்தவர்கள் பண்ணை நிலங்களை அண்டிய குடியிருப்புக்களில் வாழ்ந்த மக்களாவர். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைக் கூலிகளாகவும் வீட்டுத் தொழிலாளிகளாகவும் காணப்பட்டனர். பண்ணை நிலங்களின் பிரயோசனமற்ற பகுதிகளில் இவர்களது குடியிருப்புக்கள் காணப்பட்டன. வயது பேதமின்றி இவர்கள் கரும்புத்தோட்டங்களிலும், பழத்தோட்டங்களிலும், மரக்கறி உணவுப் பயிர்த் தோட்டங்களிலும் உழைத்தனர். இவர்களது குடியிருப்புக்கள் பண்ணை நிலங்களில் காணப்பட்டதனால் இவர்களைச் சுற்றி பாதுகாப்பு படையினர் இருக்கவில்லை. மாறாக ஆயுதம் தாங்கிய வெள்ளையர்கள் இருந்தனர். இவர்கள் தம்முடன் முரண்பட்டவர்களைத் தண்டித்தனர் அல்லது கொலை செய்து பண்ணை நிலங்களில் புதைத்தனர். படிப்பறிவிலும் பண்பாட்டியலிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இம்மக்கள் காணப்பட்டனர். இவர்கள் ஏறக்குறைய கொத்தடிமைகளாகவே வாழ்ந்தனர்.

இவ்வாறு தென்னாபிரிக்க கறுப்பின சமுதாயம் மூன்று பெரும் சமூகங்களாக அவர்களது வாழ்விடங்களைக் கொண்டு பிரிந்து காணப்பட்டனர். 1910ம் ஆண்டிலிருந்து தென்னாபிரிக்காவை ஆண்டுவந்த வெள்ளை இன ஆட்சியாளர்கள் மிகவும் திட்டமிட்ட வகையில் கறுப்பின சுதேசிகளை 2ம் தர பிரஜைகளாக நடாத்தியதுடன் தமது சுகபோக வாழ்விற்கும் பொருள் ஈட்டலுக்கும் கருவிகளாக கறுப்பின மக்களை பயன்படுத்தினர். ஆயினும் 1911ம் ஆண்டிலிருந்தே மிகக் கொடூரமான அடக்குமுறைக்குள்ளும் தமது விடுதலைக்காக போராடத் தலைப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 1976களில் உருவான கறுப்புணர்வு தேசிய அமைப்பு, கறுப்பின தேசிய மாணவர் ஒன்றியம், இவ்காத்தா சுதந்திர முன்னணி போன்றன தமது வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து ஈற்றில் வெற்றியும் கண்டன. இவர்களது உருவாக்கம், போராட்ட முன்னெடுப்பு யாவுமே டவுண்ஸிப் எனப்படும் சமூக அமைப்புக்குள்ளிருந்தே ஆரம்பமாகின.

உதாரணமாக இன்றைய தென்னாபிரிக்க ஜனாதிபதியும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பழைய தலைவருமான நெல்சன் மண்டேலா அவர்கள் சொவேட்டோ (Swtow) அதாவது சவுத்வெஸ்ட் டவுண்ஸிப் (South West Township) அல்லது தென்மேற்கு குடியிருப்பு எனும் பகுதியைச் சேர்ந்தவர். இங்குதான் 1976ல் முதலாவது அரசியல் கொலை இடம் பெற்றது. ஒரு வெள்ளை இனத்தவன் ஒரு கறுப்பு இன குழுவால் அரசியலின் பெயரால் சுட்டுக் கொல்லப்பட்டான். தொடர்ந்து 76 கறுப்பின சிறுவர்கள் பாடசாலைக்குள் வைத்து வெள்ளை இன பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் ஆறாத்துயர்களில் இதுவும் ஒன்று. சொவேட்டோ கிளர்ச்சி என இதனை சர்வதேச சமூகம் வர்ணித்தது. எமது அடுத்த தொடரில் இக்கிளர்ச்சி பற்றிப் பார்ப்போம்.

தொடரும் ... ... ...

---

தடுமாறாமல் நீ வாழ விரும்பினால் உன்னில் வாழும் சில இலட்சியங்களைத் தடுமாற விட்டுவிடாதே.

---

நீ செய்யும் செயல்களுக்கு மதிப்பு இல்லையே என்று கவலைப்படாதே. செயலினால் ஏற்படும் பலனைச் சுவைத்த பிறகே மதிப்பு என்னும் காசை இந்த உலகம் உனக்கு அளிக்கும்.

---


இன்னும் கொஞ்சக் காலத்தில் நீ இருக்கும் இடத்தில் இன்னொருவன் வாழப் போகிறான். நீயிருக்கும் இடத்தைவிட்டுச் செல்வதற்குள் உன்னால் நீயிருக்கும் இடம் பெருமையடையட்டும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



## திருமலையில் திவ்விய நற்கருணைப் பெருவிழா

★ எம் அனைவருக்காகவும் தன்னுயிர் ஈந்த எம்மீட்பராம் இயேசுக் கிறீஸ்து வின் திருஉடல் திரு இரத்தம் தனை அன்புடனும், பக்தியுடனும் நினைவுகூர திருமலை மறைக் கோட்டத்தில் இருந்து ஏராளமான விசுவாசிகள் கடந்த 21-6-98அன்று பெரியகடை புனித அந்தோனியார் ஆலயத்தில் அணி திரண்டனர். பி. ப. 5-30 மணியளவில் பங்குத் தந்தை அருட்பணி T. றாகல் அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

திருப்பலியின் பின் திவ்விய நற்கருணை பவனியாக புனித மரியாள் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இறுதியாக நற்கருணைப் பவனி புனித மரியாள் பேராலயத்தை அடைந்து அங்கு அலங்கரிக்கப்பட்டிருந்த ''வம்பேக் அரங்கில்'' மனுக்குலத்தை கிறிஸ்துவின் திரு இருதயத்துக்கு ஒப்புக் கொடுத்து நற்கருணை ஆசீருடன் விழா நிறைவுக்கு வந்தது.

## பாலையூற்றுத் திருப்பதியில் லூர்து அன்னையின் திருவிழா

★ திருகோணமலை மறை மாவட்டத்தில் கத்தோலிக்க மக்களின் வரலாற்றுப் புகழ்பெற்ற யாத்திரை ஸ்தலமான பாலையூற்றுத் திருப்பதியில் லூர்து அன்னையின் வருடாந்த திருவிழா 31-5-1998 அன்று பக்தி நிறைந்த வழிபாடுகளுடன் கூடிய பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையினால் இவ்வாண்டு தூய ஆவிக்கு அர்ப்பணித்திருப்பதை கவனத்திற் கொண்டு அன்னையின் திருவிழா சிறப்பு மறை உரைகளில் அன்னையின் வாழ்வு தூய ஆவியின் வருகை பற்றி எடுத்துக்கூறப்பட்டது.

31-5-98 அன்று காலை 7-30 மணியளவில் திருநாள் திருப்பலியானது திருமலை மறைக்கோட்ட குருப்பிரசாதிகள், அமலமரித்தியாகிகள் சபைக் குருமார்கள் என எட்டுப்பேர் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

முதற் தடவையாக கடந்த 31-05-1997 அன்று பாலையூற்றுப் பங்கு தேவாலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர்களில் ஒருவரான அருட்பணி ஜெரோம் (அ, ம. தி.) அவர்களும் தனது ஓராண்டு நிறைவுப் பூரிப்போடு இப்பலிப் பூசையில் கலந்துகொண்டு ஒப்புக்கொடுத்தார் என்ற மகிழ்வுடனும அன்னையின் திருப்பவனியைத் தொடர்ந்து அன்னையின் ஆசீர்கிடைக்கப்பெற்ற நிறைவோடும் திருவிழா சிறப்புப்பெற்றது.

## திருமலைப் பேராலயத்தில் தூய ஆவியார் விழா

★ தூய ஆவியானவரின் ஆண்டின் ஆயத்த விழாவாக திருமலைப் பேராலயத்தில் 15-6-98 இலிருந்து 21-6-98 வரை, விழாவின் ஆயத்தமாக ஆறு நாட்கள் வழிபாடுகள் நடத்தப்பட்டு விழா கொண்டாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராலயத்தில் இயங்கும் அருங்கொடை இயக்க அங்கத்தவர்கள், பங்குத் தந்தையவர்களின் தலைமையில் இவ் விழாவைக் கொண்டாட முன்வந்தனர். வழிபாட்டின் முற்பகுதி தினமும் துதி புகழ் மூலம் பாடி ஆரம்பிக்கப்பட்டது. இப்பகுதி வழிபாட்டை அருங்கொடை இயக்கத் தலைவியும், சில அங்கத்தவர்களும் முனனின்று நடாத்த ஏனைய அங்கத்தவர்கள் இணைந்து கொண்டனர். தொடர்ந்து திருப்பலி பங்குத்தந்தையவர்களால் நிறைவேற்றப்பட சிறப்புரைகளை தந்தையவர்களும், அருட்சகோ. திருச்செல்வம், அருட்சகோ. ஜோர்ஜ் ஜீவராஜ் ஆகியோரும் நிகழ்த்தினர்.

தினமும் மக்கள் திரளாக வழிபாடுகளில கலந்து சிறப்பித்துப் பயனடைந்தனர். இறுதி நாள் ஞாயிற்றுக்கிழமை விழா பாடற் திருப்பலி, காணிக்கைப் பவனிகள் இனியபாடல்கள் யாவற்றுடனும் தூய ஆவியானவரின் மகிமைக்கு அணிசெய்ய பக்திநிறையுடன் மக்கள் பங்குகொண்டு விழாவை நிறைவு செய்தனர்.

## குருக்கள், கிறிஸ்துவுக்கு சான்றுபகர வேண்டும்

★ நெதர்லாந்து ஆயர்களை சந்தித்த திருத்தந்தை டச்சுக் குருக்கள் மீது தாம் ஆழ்ந்த நம்பிக்கையையும் மதிப்பையும் வைத்திருப்பதாகவும் குருக்களின் பணி வாழ்வு மீது ஆழ்ந்த அக்கறை கொள்ள வேண்டியது ஆயர்களின் முக்கிய கடமை என்றும் கூறினார். மகிழ்ச்சியுடன் கிறிஸ்துவுக்கு சான்றுபகர குருக்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்ட திருத்தந்தை கடமை தவறாப் பணியிலும், நேர்மை நிறைந்த வாழ்வின் மூலமும் சாட்சிபகர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## திருத்தந்தையின் 83வது திருப்பயணம்

★ மூன்று நாள் ஆஸ்த்திரிய பயணத்தை மேற்கொண்டு கடந்த ஜூன் மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை புறப்பட்டார், திருத்தந்தை. தமது 83வதுதிருப்பயணத்தைத் தொடங்கிய திருத்தந்தை தால்ஸ்பிக், வியன்னா போன்ற ஆஸ்த்திரிய முக்கிய நகரங்களில் சிறப்பு நிகழ்வுகளில் கலந்துகொண்டார். தால்ஸ்பிக் விமான நிலையத்தில் வந்திறங்கிய திருத்தந்தைக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சியில் ஆஸ்திரிய தலைவர், அமைச்சர்கள், திருச்சபைத் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மாறிவரும் ஆஸ்திரியச் திருச்சபை

★ ஆஸ்திரியாவின் 80 இலட்சம் மக்கள் தொகையில் சுமார் 50,000 பேர் உவீராசேர்ச் என்ற பொது இயக்கத்தைச் சேர்ந்துள்ளதால் ஆஸ்திரியாவின் தலத்திருச்சபை ஒரு பெரிய சவாலைச் சந்தித்து வருகிறதென ஆஸ்திரிய கர்தினால் ஒருவர் கூறியுள்ளார். திருத்தந்தையின் ஆஸ்திரிய திருப்பயணத்தை ஒட்டி ஆஸ்திரிய கருதினால் கிறிஸ்ரஸ் சாந்தோனோடு இடம்பெற்ற பேட்டியின்போது தலத்திருச்சபையில் அரிய பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் கத்தோலிக்க திருச்சபை அமைப்பின் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து வருகின்றனர் என்றும் கூறினர். புதிதாக எழுச்சி பெற்றுவரும் உவீராசேர்ச் என்னும் இயக்கத்தின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதால் கத்தோலிக்கர் இவ்வியக்கத்தில் சேருவதில்லை, மாறாக திருச்சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளின் மீது கொண்ட அதிருப்தியின் காரணமாக விலகிச் செல்கின்றனர் என்று கர்தினால் சாந்தோ குறிப்பிட்டார். பெருவாரியான கத்தோலிக்கர்களைக் கொண்ட ஆஸ்திரிய மக்கள் கத்தோலிக்க விசுவாசத்தையே விரும்பும் வேளை திருத்தந்தையின் ஆஸ்திரிய திருப்பயணம் அவர்களின் விசுவாசத்தைப் புதுப்பிப்பதாய் அமைந்துள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந. பார்த்திபன்

**-33-**

அவளை வின்சன் எவ்வளவு நேசிக்கிறான். ஏன் இதைப் புரிந்துகொள்ள என் பெற்றோர் மறுக்கிறார்கள் என ரலீனா பெற்றோர்களிடம் போய்ச் சொல்லக்கூடியவர்களிடமெல்லாம் கூறியிருக்கிறாள். இருந்தும் என்ன பிடிவாதம்! ஏன் என்னைச் சந்தோஷமாக இருக்க விடுகிறார்களில்லை. மதம் என்ற வெறியா?

வின்சனுக்குக்கூட இந்தக் கேள்வி அடிக்கடி தோன்றும் எங்களை வாழவிடுங்கள். மதத்தின் பேரால் பிரிக்கவோ மதம் மாற்றவோ யாரும் என்னிடம் வரக்கூடாதென சொல்லி அனுப்பிக் கொள்வான். இதுவரை அவனிடம் சொந்தம் பாராட்டிக்கொண்டு யாரும் வர அனுமதிக்காதிருந்தவனுக்கு, அவனையும் மீறி அவர்கள் வரச் சந்தர்ப்பமாய் அந்த படுபாவி அடித்தது காரணமாயிற்றே என்கிற ஆதங்கமே அவன் மீது தீராத கோபமாய் எரிகிறது.

அப்படிக் கோபம் இன்னும் சாம்பலுள் அமிழ்ந்திருக்கும் தணலைப்போல் தனக்குள் இருப்பினும், அவனைத்தான் அடிக்க பின் அச் சண்டை மாறி மாறித் தாக்கி அது ரலீனாவை இன்னமும் வேதனைப் படுத்தும் என்ற ஒரு காரணத்திற்காகவே மறப்போம் - மன்னிப்போமென வயதை மிஞ்சிய பொறுமையாய் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதை ரலீனா புரிந்துகொண்டதும் அவன் மேலுள்ள அன்பும் பிணைப்பும் அதிகமாகிக் கொண்டே போனது.

ஆனால் இருவரது பெற்றோரினதும் வீம்பான நடத்தைகள் மழை விட்டாலும் தூவானம் விடாதது போல தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

வின்சனின் தந்தை தன் கையாட்களை வைத்து அடித்தவனுக்குப் பதிலடி கொடுத்துவிட்டார். மறந்துபோக விடாது கடந்தகால கசப்பான நினைவுகளாய்க் கலந்துபோக விடாது இஸ்லாம் கிறீஸ்தவம் என்ற வெறியோடு சண்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அவை தொடர்பான விடயங்களைக் கேள்விப்படும்போது எங்களால் தானே இவ்வளவும் என்பதில் இருவருக்கும் மனவருத்தம் இருக்கத்தான் செய்தது, என்ன வாழ்க்கை இது என்று அங்கலாய்ப்புப் பிறக்கிறது.

பொலிஸ் தலையிட்டு இரு பகுதியினரிலும் சில அப்பாவிகளையும் சேர்த்து கைது செய்தும் நிலைமை அடங்கவில்லை.

முலாபர் ஒருநாள் வங்கிக்குச் சென்று அந்தோனிப்பிள்ளையைக் கூப்பிட்டுப் பேசி .... இருவரும் அடித்துக் கொள்ளாத குறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கதை

''உன்ரை பணம் உன்னோடை... என்ரை சண்டித்தனத்தை நான் காட்டுறன், வேதக்காற நாயள்...'' அவரது பேச்சில் சூடேறி ''போடாபோ, நீ பெரிய அரச பரம்பரை...அறை கூவிச் சண்டித்தனம் செய்யப் போறியோ போய் உன்ரை கெட்டித்தனத்தைக்காட்டு .. வீட்டில தின்ன வழியில்லை பொம்பிளைப் பிள்ளையை மாப்பிளை பிடிக்க அனுப்பிவிட்டு இப்ப பெரிய மனிசனாய் வந்திட்டாய்'' என அந்தோனிப்பிள்ளையும் வெடித்துக் கொண்டார்.

ஊர் சிரித்தது. தூபம் போட்டது. எரிகின்ற நெருப்புக்கு எண்ணை ஊற்றப்பட்டது. முலாபர் மகளைத் தேடிச் சென்று ''நீ மாப்பிள்ளைபிடிச்சிட்டாய் .. எனக்கு மானம் போகிறது'' என்று பேசி வேதனையோடு சென்றார். அந்தோனிப்பிள்ளையும் மகனைப் பாடசாலையில் சந்தித்து, ''இவ்வளவு காலமும் 'பாங்கில்' எனக்கிருந்த மரியாதை இன்று .. உனக்கிப்ப திருப்திதானே'' என்று பேசி வேதனையோடு சென்றார். ரலீனாவும் வின்சனும் அன்றையதினம் அமைதியாகவே இருந்தார்கள். இந்த விடயத்தைப் பேசினால் இருவரது தந்தை மாரையும் மாறித் தாக்கிப்பேச வேண்டி வருமென்பது அவர்களுக்குப் புரிகின்றது.

அடுத்த நாள்கூட ''வின்சன் எங்க வாப்பா செய்தது பிழை'' என்றே ரலீனா பேசினாள். வின்சன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளது பெருந்தன்மை, தங்களுக்குள் பிரிவு-சலனம்-கோபம் - வெறுப்பு வந்விடக் கூடாதே என்ற உள்ளத்தை உணர்ந்தான். ''இல்லை ரலீனா, என்ரை அப்பாவும் செய்தது பிழைதானே. அடிவாங்கிய நானே அதை மறந்திருக்க, இவரேன் ஆளை வைச்சு அடிக்கவேணும். பழிக்குப்பழி என்கிற மிருகஉணர்வு என்ரை அப்பாவிட்டே நிறைய இருக்கிறது. அவர் வாழ்ந்த வாழ்க்கை அப்படிப்பட்டது'' என அவளுக்கு ஆறுதலாய்க் கூறிக்கொண்டான். மத்தளம் போல் இருபக்கமும் அடிவிழுந்தாலும் அது தன் நாதத்தை இழக்காததுபோல வெளியே நடக்கின்ற எதுவும் தங்களது அன்பை-இணைப்பை உடைக்கக் கூடாதென அவர்கள் விரும்பினார்கள்.

ஆனாலும் இதற்கொரு முடிவு கட்டவேண்டும், எங்களின் பெயரால் யாரும் அடிபிடிப்படக் கூடாது என்பதை கவலையுடன் நினைத்துக் கொண்டார்கள். ஏதோ புனித யுத்தமொன்றை அவர்கள் தொடங்கியிருப்பதுபோலவும், தங்களின் அன்பைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தங்களின் நன்மைக்காகவே இந்தப் பிரச்சினையை வளர்ப்பதாக நினைத்து தங்களைத் தாங்களே திருப்திப்படுத்தும் பெற்றாரை நினைத்து வேதனைப்பட்டு, ஆத்திரமுற்று இருவரும் தங்கள் குடும்பத்தினர்க்கு கடிதமெழுதினார்கள். பதிலே இல்லை. போகட்டும் சண்டையை விட்டார்களா என்றால் அதுவுமில்லை.

''வின்சன் பள்ளிவாசல்ல இருக்கிற அஸரத் சொன்னா எங்கட வாப்பா வேதம்போல் கேட்பார். அவர் மூலம் புத்தி சொல்லச் செய்யவேண்டும். அதற்கான வழி என்ன?'' எனக் கேட்டாள் ரலீனா. ''நானும் இந்த ஐடியாவை நிசைச்சன் ரலீனா. என்ரை அப்பாவுக்கும் 'பாதர்' சொன்னாச் சரி. பெட்டிப்பாம்பாகி விடுவார். இப்ப நாங்க அதற்கான வழியைப் பார்ப்பம்'' என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியும் நஞ்சும்

## கதை சொல்லும் விவிலியம் 5

(2 அரசர் 5 : 1—27)

☐ எஸ். ஜெயராஜா

அன்பான பிள்ளைகளே! இன்று நாம் நன்றி செய்த ஒரு மனிதனையும் அதில் நஞ்சு கலந்ததுபோல கேவலமாக நடந்துகொண்ட இன்னொரு மனிதனையும் பற்றிச் சொல்லப் போகிறோம், படித்துப் பாருங்கள்.

சீரியா நாட்டுப் படைத்தலைவன் நாமான் ஆற்றல் மிக்கவனும் செல்வந்தனுமாயிருந்தான் இதனால் அரசனும் மக்களும் இவனை மதித்து வந்தனர். இவனுக்கு தொழுநோய் ஏற்பட்டது, பல வைத்தியங்கள் செய்தும் பலனளிக்கவில்லை. இஸ்ராயல் நாட்டிலுள்ள எலிசேயு என்னும் இறைவாக்கினர் இந்த நோயைக் குணமாக்க வல்லவர் என்பதை அறிந்து கொண்டான் நாமான். உடனே அவன் இஸ்ராயல் நாட்டு அரசனுக்கு சீரிய நாட்டு அரசன் தனது நோயைக் குணமாக்கும்படி கேட்டுக்கொண்ட கடிதத்தோடும் போதுமான பணியாட்களுடன் பயணமானான்.

நாமான் தூரத்தில் வரும்போதே கண்டு கொண்ட எலிசேயு, தனது வீட்டு வாசலுக்கு அவன் வந்ததும் ஆளனுப்பி, "நீ போய் யோர்தான் நதியில் ஏழு முறை குளித்தால் உன் உடல் நலம்பெறும் நீயும் தூய்மையடைவாய்" என்று சொல்லும்படி சொன்னார். அதைக்கேட்ட நாமான் கோபமடைந்து இவர் என்னைக் குளிக்கச் சொல்கிறார், என் நாட்டில் இல்லாத தண்ணீரா இங்குள்ளது அல்லது நான் குளிக்காதவனா?" என்று ஆத்திரப்பட்டு திரும்பிப்போக ஆயத்தமானான்.

நாமானுடைய ஊழியர்கள் அவனைத் தடுத்து சமாதானப்படுத்திக் குளிக்கவைத்தனர். ஏழு முறை குளித்தபிறகு நாமானுடைய நோய் பூரண குணமாகி, குழந்தைகளின் உடல்போலிருந்தது. மகிழ்ச்சியடைந்த நாமான் எலிசேயுவிடம் திரும்பிவந்து "இஸ்ராயலரின் கடவுளைத் தவிர வேறு கடவுள் அனைத்துலகிலும் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். ஆகவே, அடியேனுடைய காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றான், அதற்கு எலிசேயு மறுத்துவிட்டார். நாமான் எவ்வளவோ கெஞ்சிக்கேட்டுக்கொண்டபோதும் அவர் முற்றாக மறுத்துவிட்டார். நாமான் வேறு வழியின்றிப் புறப்பட்டுப் பயணமானான்.

இவற்றையெல்லாம் அறிந்த குரு எலிசேயுவின் ஊழியன் ஜிபேசி, சபல புத்தியாலும் பொருளாசையாலும் ஊந்தப்பட்டு நாமானின் பின்னே ஓடிப்போய் வெள்ளியும் உடையும் குருவின் பெயரால் பொய் சொல்லிக் கேட்டான். அதை நம்பிய நாமான் மகிழ்ச்சியடைந்து அவன் கேட்டவற்றில் எல்லாம் இருமடங்கு கொடுத்து வேலையாள் மூலமாக அனுப்பி வைத்தான். அவற்றைத் தன் வீட்டில் பத்திரப்படுத்திவிட்டு எதுவுமே நடக்காதவன்போல எலிசேயுவின் முன் வந்தான். அதை அறிந்து ஆத்திரமடைந்த குரு எலிசேயு, "நாமானுடைய தொழுநோய் உன்னையும் உன் சந்ததியையும் பீடிக்கட்டும்" என்று சபித்தார். அவன் அவ்விடத்தைவிட்டு வெளியேறுமுன்னே அவனுடலில் தொழுநோய் தோன்றியது.

அன்பான பிள்ளைகளே! பொருளாசை பெரும் நட்டத்தையே உண்டுபண்ணும், ஆகவே, நாம் பலனை எதிர்பாராது சேவை செய்து மேன்மையடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் இளநூலகம்.



# சுவடுகள்

மெற்றில்டா

## புனித பெனடிக்ற் ஜோசப் லப்ரே

ஒவ்வொரு வருடமும் ஆடித்திங்கள் பதினோராம் நாளில் புனித பெனடிக்ற்றை நாம் சிறப்பிக்கின்றோம். புனித பெனடிக்ற் எனப் பெயர் கொண்ட புனிதர் இருவர் திருச்சபையின் வரலாற்றில் காணப்படுகின்றனர். ஒருவரை ஏற்கனவே இதே பகுதியில் அறிமுகம் செய்துள்ளோம். தற்போது புனித பெனடிக்ற் ஜோசப் லப்ரே என்னும் இன்னுமொரு புனிதரை அறிமுகஞ் செய்துவைக்க விரும்புகின்றோம்.

பெனடிக் ஜோசப் லப்ரே 1748ம் வருடத்திலே பிரான்ஸ் நாட்டிலே அவதரித்தார். இவர் தமது பக்திமிக்க பெற்றோரின் அன்பான அரவணைப்பின் பாதுகாப்பிலே வளர்ந்தார். தமக்குரிய கல்வியைப் பெற்றோர் அவரது மாமனார், அவர் பிறந்த ஊரில் பணிபுரிந்த ஒரு குருவானவர் ஆகியோரின் உதவியுடன் பெற்றுக்கொண்டார். இவர் அளவுக்கதிகமாக திரு விவிலிய நூலை அன்பு செய்தார். அத்துடன் அவரது வாழ்நாள் முழுவதும், எந்த வேளையிலும், எங்கே சென்றபோதிலும், தன்னுடன் ஒரு திருவிவிலியத்தையும் கொண்டு செல்லும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்தார்.

இவர் தமக்குப் பதினாறு வயதானபோது துறவறச் சபையொன்றிடம் சென்று அதில் சேர அனுமதியைக் கோரினார். ஆனால், அங்கு சேரும் அனுமதி அவருக்கு மறுக்கப்பட்டுவிட்டது. மனஞ் சோர்ந்திடாதவராய் கார்த்துசியன் சபையில் சேர முயற்சி செய்தார். ஆறுவாரங்கள் அவர்கள் மத்தியில் வாழ்ந்தார். அங்கு வாழ்ந்த காலத்தில் அவர் தமது அழைத்தலுக்கு இந்நிலை ஏற்றதல்ல என்ற உணர்வைப் பெற்றார். பின்னர் யாத்திரை செய்யும் வாழ்வில் தன்னை இணைத்துக்கொண்டார். இந்த வழியினில் தம்மைப் புனிதப்படுத்தினார் என்றே கூற வேண்டும். வறுமையில் வாடுபவர்க்குப் பணி புரிவதிலும், தர்மசத்திர வாழ்க்கையிலும் பயிற்சி பெற்றார்.

இவர் ஐரோப்பாக் கண்டத்தின் பெரும் திருத்தலங்கள் பலவற்றை யாத்திரையாகச் சென்று பார்வையிட்டார். தமது வாழ்வின் இறுதிநாட்களை ரோம் நகரில் கழித்தார். இவர் பல வேறுபட்ட புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிப்பதற்கெனப் பல யாத்திரைகளை ஒழுங்கு செய்தார். அவர் தாம் மேற்கொண்ட பயணங்கள் அனைத்திலுமே இறைமகன் கிறிஸ்துவினதும், அன்னை மரியாளினதும் வேதனைகளை உள்ளத்தில் வைத்துத் தியானித்துக் கொண்டே செல்ல முயற்சி செய்தார்.

இவருக்கு மிகவும் பிடித்தமான ஆலயம் ரோம் நகரில் அமைந்துள்ள மலைகளின் மாதா ஆலயம் ஆகும். அங்கே இவர் 1783ம் வருடத்திலே திடீரென நோய்வாய்ப்பட்டார் அவர் இறக்கும் தறுவாயில் இருந்தபோது அவரைச் சுற்றிநின்றோர் அவருக்காகப் ''புனித மரியாயே இவருக்காக மன்றாடும்'' எனப் பிரார்த்தனை செய்தனர். அவர் அமைதியாக இவ்வுலக வாழ்வை நீத்து வானகம் சென்றார்.

நாமும் அவரைப் பின்பற்றி வாழ முன்வரல்வேண்டும். அவர் போலவே நாமும் எவ்வேளையிலும் இறைபிரசன்னத்தில் வாழ முற்படவேண்டும். விசேடமாக ஆலயத்தில் நாம் இறைவனைக்காண வேண்டும். இப் புனிதரின் இறையன்பு எம்மை ஈர்க்கவும், அதனைப் பெற்று நாமும் இறைவனை அன்பு செய்யவும் வரம்கேட்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்கள் எழுதும் ஆவிகள்

- சென்ற இதழ் தொடர் -

□ தொகுப்பு: G. பீற்றர்

சிக்கோ தான் காதால் கேட்டதைத் தான் அப்படியே எழுதினார். கட்டுரைக்கான முதல் பரிசும் இவருக்கே கிடைத்தது. ஆயினும் இவர் உண்மையை மறைக்காமல் தன்னுடைய ஆசிரியர்களிடமும் நண்பர்களிடமும் கட்டுரை எழுத ஆவி எவ்வாறு தனக்கு உதவியது என்பதை எடுத்துச் சொன்னார். ஆச்சரியம் அடைந்த அவர்கள் அதை நம்ப மறுத்து அவரைப் பார்த்து ஒரு சவால் விட்டார்கள். அவர்களாக ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து கொடுப்பதாகவும் ஆவியின் உதவியுடன் கட்டுரை எழுத முடியுமா என்றும் சிக்கோவைப் பார்த்துக் கேட்டார்கள்.

சிக்கோ அடக்கமாக ''முயன்று பார்க்கின்றேன்'' என்றார். அருகில் இருந்த ஒருவர், 'மணல்' பற்றி கட்டுரை எழுது பார்க்கலாம் என்று வேடிக்கையாகச் சொன்னார். இது வகுப்பறையில் நடந்ததால் சிக்கோ ஒரு சாக்பீசை எடுத்துக்கொண்டு கரும்பலகையில் எழுத ஆரம்பித்தார்.

''என்னுடைய பிள்ளைகளே! படைப்பில் எதையும் கேவலம் என எண்ணி கேலி செய்யாதீர்கள். ஒரு துளி மணல் ஒன்றுமில்லாததுபோல உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் இறைவனின் படைப்பில் அதுவும் ஒரு நட்சத்திரமே என்பதை நீங்கள் உணர்தல் வேண்டும்'''

சிக்கோ எழுத எழுத அனைவரும் திகைப்பில் ஆழ்ந்தார்கள். ஆசிரியரே அசந்து போனார். அவரைத் தனியாக அழைத்துப்போய் ஆவிகளுடன் எந்தக் காரணம் கொண்டும் உறவு வைத்துக் கொள்ளாதே என்று புத்திமதிகூறி அனுப்பிவைத்தார்.

13 வயதிலேயே சிக்கோ தன்னுடைய படிப்பை நிறுத்திவிட்டார். துணி ஆலை ஒன்றில் வேலைக்கு அமர்ந்தார். பிறகு வீடு வீடாகச் சென்று பொருள்களை விற்கும் வேலையினை மேற்கொண்டார். கடைசியாக விவசாயத்துறையில் குமாஸ்தாவாக அவருக்கு வேலை கிடைத்தது.

சிக்கோ எழுதிய முதல் புத்தகம் ஒரு கவிதைத் தொகுதியாகும் பிரேசில் நாட்டில் இறந்துபோன பல கவிஞர்களின் ஆவிகள் சொல்லிய கவிதைகளை அவர் எழுதினார். அந்த கவிதைத் தொகுதி 471 பக்கங்களைக் கொண்டது. 259 கவிதைகள் அடங்கியது. 56 இறந்துபோன கவிஞர்களின படைப்புகள் அவை.

எழுதுகின்ற சக்தி தனக்கு எவ்வாறு வருகிறதென சிக்கோவே விளக்கிச் சொல்லி இருக்கிறார். ''என்னுடைய கையை யாரோ பிடித்து வேகமாக எழுத வைப்பதுபோல நான் உணர்கிறேன். வேறு சில சந்தர்ப்பங்களில் என்னுடைய அனுபவம் வேறாக இருப்பதும் உண்டு. எனக்கு முன்னால் ஒரு புத்தகம் விரித்து வைத்திருப்பதுபோலத் தோன்றும். அதில் காணப்படும் வரிகளை அப்படியே பார்த்து எழுதத் தொடங்கி விடுவேன். இன்னும் சில சந்தர்ப்பங்களில். யாரோ என்னுடைய காதில் மெல்லிய குரலில் சொல்லத் தொடங்குவார்கள் அதை நான் அப்போதைக் கப்போது எழுதத் தொடங்கிவிடுவேன்.''

புத்தகங்களிலிருந்துவரும் ராயல்டி தொகையை சிக்கோ பெற்றுக் கொள்ளாவிட்டாலும் ஏழைகளுக்கு உதவும் ஒரு நிறுவனத்திடம் அதை ஒப்படைக்கச்சொல்லி அவர்களுக்கு உதவி கிடைக்க அவர் ஏற்பாடு செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்துபோன எந்த ஆசிரியர் சொல்லி ஒரு நூலை அவர் எழுதுகிறாரோ அந்தப் புத்தகத்தின் அட்டையில் இன்னாருடைய ஆவி சொல்லி எழுதப்பட்டது என்பதையும் தெளிவாகவே போடச் சொல்லி விடுகிறார். இவ்வாறு சிக்கோ எழுதியதை மூன்று தலைப்புகளில் கொண்டு வரலாம். இலக்கியம் என்கிற தலைப்பில் கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், குழந்தைகளுக்கான விஷயங்கள் அடங்கும். வரலாறு என்ற தலைப்பில் பிரேசில் நாட்டு வரலாறும் உலக வரலாறும் அடங்கும். விஞ்ஞானம் என்ற தலைப்பில் இரண்டு புத்தகங்கள் மட்டுமே சிக்கோ எழுதியுள்ளார்.

சிக்கோ எழுதிய புத்தகங்கள் ஸ்பானிஷ், ஜப்பான் போன்ற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவர் எழுதிய சில நாவல்கள் 700 பக்கங்களையும் தாண்டியிருக்கின்றன.

இதில் கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால் சிக்கோ ஆரம்பக்கல்வி என்ற அளவிலே மட்டும்தான் பெற்றவர். அவரால் ரோமாபுரியின் வரலாறு எழுத முடிகிறதென்றால், அவர் சென்றறியாத பல நாடுகளின் பூகோள அமைப்பினை அவரால் தெளிவாகச் சொல்ல முடிகிறது என்றால், விஞ்ஞான விளக்கங்கள் கொண்ட நூல்களை எழுத முடிகிறது என்றால், ஆராய்ச்சிகள் எதுவும் செய்வதற்கு நேரம் இல்லாத அவரால் இந்த காரியங்களைச் செய்ய முடிகிறதென்றால், நிச்சயம் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி அவரை இயக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

அவர் எழுதிய விஞ்ஞான நூல்களில் காணப்படும் விஞ்ஞான உண்மைகள் பெரிய ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே அறிந்து சொல்லக்கூடியவை என்று விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். எழுதும்போது சிக்கோ தன்னை மறந்த நிலையில் எழுதுவதை அனைவருமே பார்த்திருக்கிறார்கள். ஒருமுறை அந்த மயக்கத்திலிருந்து அவர் விடுபட்டு விட்டால் தான் எழுதிய எதுவுமே அவரது நினைவில் இருப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

சிக்கோவுக்கு என்று வாழ்க்கை இலட்சியங்கள் எதுவும் இல்லை. பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையும் அவருக்கு இல்லை. தனக்குக் கிடைத்த இந்த ஆற்றலைப் பயன்படுத்தி அவர் நினைத்திருந்தால், எவ்வளவோ பணம் சம்பாதித்திருக்கமுடியும். தனக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் அனைத்தையும் தர்ம அமைப்புகளுக்கு கொடுக்கச் சொல்லி விட்டு 74 வயதைத் தாண்டிய நிலையிலும் ஏழ்மையிலேயே இன்பத்தோடு அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இப்போதும் ஆவேசம் வந்தவரைப்போல எழுதிக்கொண்டே இருக்கிறார்.

சிலர் அவரை தெய்வ புருஷர் என்று மதிக்கிறார்கள். வேறுசிலர் மோசடிக்காரர் என்று அவரை வர்ணிக்கிறார்கள். சிக்கோவைப் பொறுத்தவரையில் புகழுரை, அவதூறு ஆகிய எதையுமே அவர் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. எழுதிக்கொண்டே இருக்கிறார்.

பிரேசில் நாட்டிலுள்ள நரம்பியல் நிபுணர்கள் அவரது மூளையைப் பரிசோதித்து அதிலிருந்து தோன்றும் அதிர்வுகளைப் பதிவு செய்து இருக்கிறார்கள். மிக அதிகமான வேகத்துடன் அந்த அதிர்வுகள் செயல்படுவதை அவர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

பிரேசில் நாட்டு எழுத்தாளர்களின் ஆவிகள் சொல்வதை எழுதும் சிக்கோ சேவியர் ஆனாலும் சரி, இறந்துபோன சார்லஸ்டிக்கன்ஸின் முடிக்காத நாவலை டிக்கன்ஸின் ஆவி சொல்ல முடித்த தாமஸ் ஜேம்ஸ் ஆனாலும் சரி, பணத்தாசையால் இந்த காரியங்களை அவர்கள் செய்யவில்லை என்பது தெளிவாகவே நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

(25ம் பக்கம் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய பொது அறிவுப் போட்டி - 30

1. இச்சிறியோருள் ஒருவர் கூட நெறிதவறிப் போகக்கூடாது என்பதே ... ... ... ... மத்தேயு நற்செய்தியில் இடம்பெற்றுள்ள இவ்வசனம் எந்த உவமையில் கூறப் பட்டுள்ளது?

..........................................................................................

2. கருவாலி மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கையில் கொலைசெய்யப்பட்டவன் யார்? இவன் ஒரு புகழ்பெற்ற அரசனின் மகன்.

..........................................................................................

3. திருமுகம் ஒன்றில் மனித நாவு கப்பலில் காணப்படும் சுக்கானுக்கு ஒப்பிடப்பட் டுள்ளது. அத்திருமுகம் எது?

..........................................................................................

4. புற்றுநோய்க்கு மருந்தாக உதவும் இரேடியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

..........................................................................................

5. இலங்கையில் 1வது குடியரசு அரசியல் திட்டம் எத்தனையாம் ஆண்டு நடை முறைக்கு வந்தது?

..........................................................................................

6. தற்போது பிரான்சில் நடைபெற்று முடிந்த எத்தனையாவது உலகக்கிண்ண கால் பந்துப் போட்டி?

..........................................................................................

பெயர் ..........................................................................

முகவரி ..........................................................................

..........................................................................

........................................ இங்கே வெட்டவும் ........................................

### போட்டி விதிகள்

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக் களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப் பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 10-09-98

முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 30,

தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்குக் கிடைத்த சக்தியைப் பயன் படுத்தி பணம் சம்பாதிக்க வாய்ப்பிருந்தும் அவர்கள் அதில் சிறிதும் அக்கறை காட்டாமல் ஒதுங்கியே இருந்தார்கள் என்கிற உண்மையினைப் புறக்கணிப்பதற்கில்லை. அதற்குப்பிறகும் மோசடிக்காரர்கள் என்று அவர்களைப் பழி தூற்றுவது நேர்மையான அணுகுமுறை ஆகாது.

இறந்தவர்களின் ஆவிகள் செயல்படுகின்றன. சில மனிதர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செயல்படுகின்றன. இந்த ஆவிகள் எப்படிப்பட்ட மனிதர்களைத் தேர்ந்தெடுக்கின்றன என்று பார்த்தால் ஆவிகள் இருப்பதை நம்புகின்ற மனிதர்களையே தேர்ந்தெடுக்கின்றன என்பது தெளிவாகிறது.

ஆவிகள் இவ்வாறு தேர்ந்தெடுக்கும் மனிதர்களை ஆவி உலக ஆராய்ச்சியாளர்கள் மீடியம் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். மீடியமாக செயல்படுகின்ற மனிதர்கள் நமக்காக ஆவிகளுடன் பேசுகின்ற ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள் என்றும், அவர்கள் வேண்டி அழைத்தால் இந்த ஆவிகள் அவர்களோடு விரும்பி உரையாடுகின்றன என்றும் ஆவியுலக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

இதை வெறும் மூட நம்பிக்கை என்று அலட்சியப் படுத்துவதற்கில்லை. மறைமலையடிகள் போன்ற அறிஞர்களும் யோகத்தில் அரிய சாதனைகளைப் பெற்றுள்ள யோகிகளும் இது சாத்தியம் என்பதோடு தங்களின் அனுபவ மேற்கோள்களையும் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

---

# திருமதி சூசைப்பியா சகாயமேரி பிரான்சிஸ்

**மண்ணில்: 19-2-195)** **மண்ணுக்கு: 6-7-1998**



மறக்க முடியவில்லை தாயே
மறக்கின்ற முகமு மில்லை
சிறக்க வாழவைத் தாயே
சீர்பார்க்க நீங்க ளில்லை
பறக்க ஆசைவைத் தாயே
பாதிவழி நீங்க ளில்லை
வெறுத்தன வாழ்க்கை தாயே
வேதனை தீர்வ தில்லை

என்றும் நினைவுடன்

அன்புக் கணவன்: எஸ். பிரான்சிஸ் (சகாயம்)
ஆசைப்பிள்ளைகள்: பி. நில்நிஷாந்
பி. ஜெரிருஷாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Papır in Sri Lanka.

# காற்றில் கலந்து வரும்

**இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் - 1998.**

நாள்: *15, 16, 17, 18, 19, 20, 21, 29, 30, 31.*
நேரம்: காலை 5-50 மணி.

**— கத்தோலிக்க நற்சிந்தனை —**

நாள்: *11, 25.*
நேரம்: மாலை 7-45 மணி

**'சிறுவர் உலகம்' (சிறுவர் நிகழ்ச்சி)**

நாள்: *09, 23.*
நேரம்: மாலை 7-00 மணி.

**— புதிய உலகம் — (வளர்ந்தோர் நிகழ்ச்சி)**

தொகுப்பு: **மலர்வேந்தன்**
தொடர்பு: அ. பெ. எண் 44
மட்டக்களப்பு - 30000.

## விவிலிய - பொது அறிவுப் போட்டி - 28 முடிவுகள்

**விடைகள்:**

1) கபிரியேல் தூதர் 2) மத்தேயு 6, 22 3) மக்கெதோனியா
4) ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 5) சட்டத்தரணி (2 கொரி 2-13)
6) ரவீந்திரநாத் தாகூர்

பரிசு 100/- — அருட் சகோ. பிறிட்டோ அலோசியஸ் அ. ம. தி.
அமலமரித்தியாகிகள் குருமடம்,
அம்பிட்டிய.

பரிசு 75/- — செல்வி சி. சுரோஷினி
19, ஞானசூரியம் சதுக்கம்,
மட்டக்களப்பு.

பரிசு 50/- — பிரகாசராஜா பேனாட்
ஆலய வீதி, மூதூர்.

பரிசு 25/- — C. J. ஜெய்ருக்ஷி
'லீலா'
அக்கரைப்பற்று - 08.

மட்/265, திருமலை வீதி, வணசிங்கா பிரிண்டேர்ஸில் அச்சிட்டு, தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 10.08.98 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org